# ஆழிசூழ் உலகு நாவலின் வழி பரதவர்களின் பண்பாடுகளும் சமூகச் சிக்கல்களும்

**து. சவிதா**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
கோவை

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

ஒவ்வொரு நிலத்தில் வாழுகின்ற மக்களும் ஒவ்வொரு விதமான வாழ்க்கை முறையினை வாழ்கின்றனர். நெய்தல் நில மக்களின் வாழ்க்கை, கடல் அலையோடு விளையாடி அதனோடு உறவாடி அதனுள்ளேயே அடங்கிவிடும் தன்மையுடையது.

இலக்கியப் படைப்புகள் செய்திகளைக் கூறும் தகவல் தொகுப்புகளாக மட்டுமல்லாமல் படைக்கப்பட்ட காலத்தின் வரலாற்றுக் கூறுகளையும், சமூகத்தின் வரலாற்றுப் பின்னணியையும், பண்பாடுகளையும் வெளிப்படுத்தும் காரணிகளாகவும் திகழ வேண்டும். சங்க இலக்கியமும், காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும் இத்தகைய பின்புலத்தைக்கொண்டவை. நாவல் இலக்கியத்தில் எண்ணற்ற படைப்பாளர்களில் ஜோடிகுரூஸ் ஒருவர் ஆவார். முற்றிலும் புதிய செய்திகளை புதுவகைத்தன்மைப் போக்குடன் விவரிக்கும் பின்னணியில் தான் வாழும் சமூகத்தை இணைத்து அவற்றை இலக்கியத்தடத்தில் காட்டும் முயற்சியை ‘ஆழிசூழ் உலகு’ என்னும் நாவல் காட்டுகிறது.

### பண்பாடு

ஒவ்வொரு சமூகமும் தனக்கென்று சில தனிப்பண்புகளைப் பெற்றுள்ளன. அவை பொதுப்பண்புகள், சிறப்புப்பண்புகள் என்னும் இருநிலைகளில் காணப்படுகின்றன. ஒரு சமூகத்தின் அனைத்து மக்களிடம் காணும் பண்புகள் பொதுப்பண்புகள், அச்சமூகத்தில் குறிப்பிட்ட இனத்திற்கு மட்டும் உரிய பண்புகள் சிறப்புப் பண்புகளாகவும் கருதப்படுகின்றன. பண்பாடு பழக்கவழக்கங்களின் அடிப்படையில் தோன்றுவது. அப்பண்பாடு பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடு போன்ற மூலக்கூறுகளைக் கொண்டது. அம்மூலக்கூறுகள் மனித வாழ்க்கையில் நிலைத்து நிற்கும் போது மரபாகச் சுட்டப்படுகின்றன.

சங்க இலக்கியங்களில் பண்பு, பண்புடைமை ஆகிய சொற்கள் இடம் பெறுவதைக் காணலாம். “பண்பு எனப்படுவதற்குப் பாடறிந்து தொழுகல் என்று கலித்தொகை கூறுகின்றது.[1] அதற்கு நச்சினார்க்கினியர் பெருமை சான்றான்மைகளுள் நாம் வழுவாது நின்று எல்லா இயல்புகளையும் ஒத்து ஒழுகுதல் என்று பொருள்

கூறுவர். “பண்பு என்பதற்கு குணம், தகுதி, விதம், இயல்பு, மனிதத்தன்மை, அழகு, செய்கை, முறை, பண்புப்பெயர் ஆகியப் பொருள்களைக் குறிக்கிறது. தமிழ் கழக அகராதி2 பண்பாடு, பழக்கவழக்கங்கள், மரபுகள் ஆகியவை ஒரு தலைமுறையினரிடமிருந்து இன்னொரு தலைமுறையினர் கற்றுக் கொள்வதாகும் என்பது லேபியர் கருத்தாகும்.”3 “ஓர் இனத்தைச் சேர்ந்த எல்லா மக்களுடைய வாழ்க்கை நெறியில் மிக முக்கியமான அம்சங்களை விவரிப்பதே பண்பாடு என்கிறார் டி.டி.கோ. சாம்பி”4

### பரதவர்

நமது மரபில் மிகப் பழமையுடைய இலக்கியங்களின் பாடல் பெற்ற தொல்குடியினர் நெய்தல் நிலப் பரதவர்கள் சங்க இலக்கியமான நற்றிணைப் பாடல் பரதவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

**“கானல் அம்சிறுகுடிக் கடல்மேல் பரதவர்**
**இருங்கழிச் சேர்ப்பின் உறைவின் ஊர்க்கே”5**

எனும் பாடல் பரதவர்களின் நிலைமையைப் பறைசாற்றுகிறது. மேலும் குறுந்தொகை, கலித்தொகை பாடல்களிலும் இக்கருத்தைக் காணலாம். கலப்புகளும் மாறுதல்களும் அதிகமில்லாத தனித்த பண்பாட்டுக் கூறுகளுள் இனக்குழுவினராக காலஓட்டத்தை எதிர்க்கடந்து வந்தவர்கள் போர்ச்சுக்கீசியர்களால் கிறித்தவர்களாக மாற்றப்பட்ட முதல் இனக்குழுவினர் குமரிக்கன்னிக்கு பதிலாக மரிய மாதாவை இன்று தொழுகின்றனர்.

### சமயம்

பரதவ மக்கள் வாழ்வியல் சமயம் முக்கியப்பங்கு வகிக்கின்றது. சமூகவியலாளர்கள் சமயத்தை ஒரு நிறுவனமாகவே பார்க்கின்றனர். ஒரு தனிமனிதன் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் சமயம் குறுக்கிடுகிறது. அன்றாட வாழ்விலும் கூட சமயத்தைத் தழுவிய மக்களே முக்கிய இடம் பெறுகின்றனர். கி.பி.1532-33-இல் முகம்மதியர்களுக்கும் பரதவர்களுக்கும் இடையே நடந்த ஒரு போராட்டத்தில் போர்ச்சுக்கீசியர்களின் உதவியை பரதவர்கள் நாடினர். பரதவர்கள் கத்தோலிக்கர்களாக மாறினால் அவர்களுக்குப் படை தந்து உதவுவதாகக் கூறவே பரதவர்கள் அனைவரும் கத்தோலிக்கர்களாக மாறினர்.

### பரதவர் பெருமை

முற்காலத்தில் பரதவர்கள் வருண வழிபாட்டைத் தவிர திங்கள் வழிபாடு, கதிரவன் வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகளை வழக்கமாக பயன்படுத்தினர். நிலவை வழிபட்டோர் நிலா பரதவர்கள் என்றும், காலப்போக்கில் சூரிய வழிபாடு, வருண வழிபாடு மறைந்து முருக வழிபாடு தோன்றிற்று. பின் பரதவர்கள் இந்துக்களாக இருந்து கிறித்துவ மதத்திற்கு மாறினாலும் பழைய மரபுப்படி இந்துக் கடவுள்களை கொண்டாடத் தவறுவதில்லை. அவ்வகையில் திருச்செந்தூர் முருகன் கோவில் தேரானது பரதவ இனத்தவரின் கரம் படாமல் நகர்வதில்லை என பரதவர்கள் பெருமைப்படுகின்றனர்.

### இறை நம்பிக்கை

மனிதனது மூன்றாவது கையாக விளங்குவது நம்பிக்கை. மக்களிடையே நம்பிக்கை வேரூன்றி திகழ்வதற்கு அச்சஉணர்வே காரணமாகிறது. சமுதாயத் தேவைகளை நிறைவு செய்வதன் பொருட்டு நம்பிக்கைகள் தோன்றின.

பரதவ மக்கள் கடலில் பெரிய மீன்களின் மூலம் ஏற்படும் அபாயத்திலிருந்து குமரி ஆத்தாள் காப்பாற்றுவதாக நம்பிக்கைக் கொண்டிருந்தனர். “இதுவயெல்லாம் குசும்பு” பண்ண ஆரம்பிச்சா நம்ம இந்த கடல் தொழில் செய்ய முடியாது அய்யா. அந்தக் காலத்தில் இருந்தே பெரியவங்க சொல்றாவயில்ல. இதுவள்ளாம் சத்தியத்துக்கு கட்டுப்பட்டது. நம்ம குமரி ஆத்தாளுக்கு கட்டுபட்டது. எப்ப இந்த மாரி பெரிய மீனவ கிட்ட மாட்டினாலும் குமரி ஆத்தா, ஓம் புள்ளய் நாங்க எங்களால் இந்த மீனுக்கு எந்த தொந்தரவும் இல்ல. அதனால் இந்த மீனாலயும் எங்களுக்கு எந்த தொந்தரவும்

வரக்கூடாதுன்னு அதுவ தலியில அடிச்சு சத்தியம் பண்ணனும். தானாயாருகிட்டயும் இதுவ குசும்பு பண்ணுறதேயில்ல”[6] எனக் கடவுளின் மேல் கட்டுக்கடங்காத அபாயச் சூழ்நிலையிலும் நிதானத்தைக் கடைபிடித்து நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை ஆழிசூழ் உலகு புதினத்தின் வழி அறியலாம்.

### ஓங்கல்

கடலில் யாராவது தவறிவிழுந்தால் அவர்களைக் காப்பாற்ற ஓங்கல்கள் பாய்ந்து வருமாம். இந்த ஓங்கல் மீன்கள் எல்லாம் முற்பிறவியில் மனிதர்களாக இருந்தவை என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். இதனால் பரதவர்கள் ஓங்கல்களைச் சாப்பிடுவதில்லை. அவற்றைப் பிடிப்பதும் இல்லை. சில நேரங்களில் இந்த ஓங்கல் மீன்கள் வலைகளைக் கிழித்ததுண்டு. இருந்தாலும் பரதவர்களுக்கு இந்த மீன்கள் மேல் பாசந்தான். கடலில் சுறாக்களை எதிர்க்கும் வலுவுள்ளவை இந்த ஓங்கல்கள் மட்டும்தான்.

### உணவு

ஆமந்துறை மக்களின் உணவு முறையானது பரதவர்களின் கடின வாழ்க்கையும், வறுமை போக்கையும் மிக நுட்பமாகக் காட்டுகிறது. சாப்பிடுவதற்கு கும்பா, வட்டில், தாலம், மரவை போன்றவற்றை பயன்படுத்தினர். பாய்மரங்களில் கடலில் செல்லும் போது குடுவையில் (சுரைக்காய்) கஞ்சி கொண்டு சென்றதையும் காணலாம். இறால், காளை, சூரை, சீல் போன்ற மீன்களையும் அவற்றின் மூலம் கிடைக்கும் மீன் எண்ணெய் (நெய்) உவர்மீன், கடல் நண்டு முதலியனவற்றை உணவாகக் கொண்டனர். குழந்தை பெற்ற பெண்களுக்கு பால் சுரப்பு அதிகமாவதற்கு மாங்காய்ச்சாளையும் ஓமக்கறியும் கொடுத்தனர். சூரை மீன்களைப் பதப்படுத்தி மாசி என்ற உவர்மீன் (கருவாடு) தயாரிக்கப்படுகிறது.

### பொருளாதார நிலை

எந்த ஓர் இனத்திலும் இல்லாத அளவுக்கு சிறுவயதிலேயே உழைத்து பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் மீனவர்கள். தன் வளத்தில் வற்றாத கடல்தாய் மீனவர்களை சிறுவயது முதலே ஏமாற்றாது வாழ்வளித்து வருகிறாள். எந்த மாற்றம் வந்தாலும், கல்வியும், நாகரிகமும் வளர்ந்த காலத்தில் கூட, மீனவ இனத்தில் பெற்றவர்களை நம்பி வாழ்தல் இல்லை என்பது கண்கூடு. மற்ற சமுதாயத்தில் முப்பது வயது ஆன பின்னும் கூட இளைஞர்கள் பெற்றவர்களை நம்பி வாழ்வதைப் பார்க்கிறோம். ஆனால் மீனவ சமுதாயத்தில் பெற்றோரை நம்பி வாழமாட்டான். வேலை கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும் கவலையும் மீனவ இளைஞனுக்கு இல்லை. கடல் அன்னை கைகொடுக்க எப்போதும் தயாராக இருக்கின்றாள். பாரம்பரியத் தொழில் இருக்கிறது என்ற மன உறுதி எப்போதுமே அவனை பெற்றவர்களைப் போல் மீனவ இளைஞனுக்கும் உண்டு.

தனியாகத் தொழில் செய்தாலும் அல்லது கூட்டாகத் தொழில் செய்தாலும் வரும் வருமானத்தின் பாதியை, வலை மரத்திற்கும் மீதியை ஆட்களுக்கும் என்று பிரிப்பார்கள். தனிமனிதனாக இருந்து சொந்த வலை இருந்தால் வரும் வருமானம் முழுவதும் குடும்பத்திற்கே சேரும். வலை மரம் ஒருவருடையதாக இருந்து அதைப் பயன்படுத்தித் தொழில் செய்தால், வரும் வருமானத்தில் பாதிபங்கு மரத்தின் சொந்தக்காரர்களுக்கும் மீதிப்பங்கு தொழில் செய்தவர்களுக்கும் சேரும். எத்தனை பேர் தொழில் செய்தாலும் வரும் வருமானம் சரிசமமாகப் பங்கு போட்டு எடுத்துக்கொள்வதுதான் வழக்கம்.

### வாழ்வியல் சிக்கல்கள்

ஆர்ப்பரிக்கும் அலைகளின் சீற்றமும், ஓங்காரமும் கொண்ட கடல் ஒன்றையே அறிந்த மீனவ மக்களின் வாழ்க்கையின் போராட்டங்கள் ஆசிரியர் மா.ராமஜெயம் அவர்கள் தன்னுடைய நூலில் வாழ்க்கை முழுமையுமே போராட்டம் என்பது மீனவ இனத்துக்கு மட்டுமே பொருந்தும். மற்ற எந்த இனத்துக்கும் இத்தகைய போராட்டமே வாழ்க்கை என்ற நிலை இல்லை. அவ்வாறு இருக்கவும்

வாய்ப்பில்லை. கட்டுமரத்துடன் போராட்டம் மற்ற எந்த வகை மீன்களாக இருந்தாலும் போராட்டம்தான். வலையுடன் போராட்டம், வெயிலுடன் போராட்டம், மழையுடன் போராட்டம், புயலுடன் போராட்டம், மீன்களுடன் போராட்டம் இத்தகைய போராட்டங்களைக் கடந்து திரும்புவதுதான் வாழ்க்கை''[7] என்று கூறியிருப்பதன் மூலம் மீனவ மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை அறிந்து கொள்ளமுடிகிறது.

## மீன்பிடித்தடை காலத்தில் ஏற்படும் சிக்கல்கள்

கடலில் மீனினங்கள் இனப்பெருக்கம் செய்யும் காலகட்டங்களில் மீனவர்கள் கடலுக்குச் சென்று இழுவலைகள், விசைப்படகுகள் மூலம் மீன் பிடிக்கும்போது அவை மீன் குஞ்சுகள், முட்டைகள் ஆகியவற்றை அழித்துவிடும் என்பதை அக்காலங்களில் மீன்பிடிக்கத்தடை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனை,

''தமிழக கடல்பகுதியில் மீன்வளத்தை பாதுகாத்திட வேண்டி ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 15 முதல் மே மாதம் 29 வரையிலும், மேற்குக் கடற்பகுதியில் ஜீன் மாதம் 15 முதல் ஜுலை மாதம் 29 வரையிலும் 45 நாட்களுக்கு விசைப்படகுகள், இழுவலைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பது தடை விதிக்கப்படுகிறது'' (தினதந்தி 25, மே 2014) என்று கூறப்பட்டுள்ளதன் மூலம் மீன்பிடிக்கத் தடைக்காலத்தை அறிந்துகொள்ள முடிகிறது.

இவ்வாறு மீன் பிடிக்கத் தடை செய்யப்படும் காலங்களில் மீனவர்களின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதாகவே கருதப்படுகிறது. தினந்தோறும் கடலுக்கு சென்றுவந்தால் உண்ண உணவு என்ற நிலையில் 45 நாட்கள் கடலுக்குள் செல்லக்கூடாது என்றால் அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்ய இயலாமல் போய்விடும் இன்னல்களுக்கு ஆட்படுகின்றனர்.

''கடற்கரை சமூகங்களைக் கண்டுகொள்ளாத அரசுகள் ஒருபுறம் கடற்கரை மற்றும் கடல் வளங்களைக் குறி வைத்து நெய்தல் நில மக்களை அங்கிருந்து விரட்டியடிக்கச் சட்டங்களை தங்கள் ஆயுதமாகப் பயன்படுத்த முயலும் வர்த்தகப் பெருந்தொழில் முதலைகள் மறுபுறம்'' என்ற ஆதங்கமான வரிகளின் மூலம் மீனவர்களின் பரிதாபமான வாழ்க்கையினை அறிய முடிகிறது.

## குறிப்புக்கள்

1. கலித்தொகை, நெய்தற்கலி, பா.எண் - 13.
2. கழகத்தமிழ் அகராதி, பா.எண். 641
3. Vidya Bhushan and Sechdeva.D.K , An Introduction to Socialogy, p. 662.
4. கோசாம்பி, டி.டி., பண்டை இந்தியா அதன் பண்பாடும் நாகரீகமும் பற்றிய வரலாறு, ப. 14.
5. நற்றிணை, பா.எண். 4.
6. ஸ்பீபன்சாம், என்.கன்னியாகுமரி, மாவட்ட மீனவர்களின் வாழ்வியல் ஓர் ஆய்வு, ப. 114.
7. ஜோ.டி.குரூஸ், ஆழி சூழ் உலகு, ப. 29.
8. மீனவர் வரலாறும் வாழ்க்கையும், ப. 76.